ஆசிரியர் பக்கம்

நாடு விட்டு நாடு வந்து தேவைகளையும் ஆசைகளையும் அளவுக்கதிகமாக பெருக்கிக்கொண்டு ஒரு வகையான இயந்திர வாழ்க்கை என்னும் எலிப்பொறிக்குள் அகப்பட்டுள்ள நாம் பிறந்த மண்ணில் வாழ்ந்த நினைவுகளை நேரம் இருக்கும் போது இரைமீட்பதில் ஒரு வகை சுகம் காண்கிறோம்.

தற்போதுள்ள தொழில் நுட்ப வசதிகள் இந்த பூமிப்பந்தை ஒரு சிறிய கிராமமாக மாற்றியுள்ள நிலையில், உலகெங்கும் பரந்து வாழும் கெருடாவில் மக்களையும் எமது கிராமத்தையும் ஒன்றிணைத்து ஒரு வலைப்பின்னல்(Network) மூலமான உறவுமுறையை கட்டியெழுப்ப வேண்டுமென்று இந்த இணையத்தளம் விரும்புகின்றது. இதற்கான சிறிய முயற்சிகளை கடந்த காலத்தில் செய்துள்ளது.

கனடாவில் உள்ள ஒன்டாரியோ மாகாணத்திலுள்ள டொரோன்டோ (Toronto) என்னும் நகரத்தை மையமாக கொண்டு நாம் இயங்குகின்றோம். இந்த நகரத்தை சுற்றியுள்ள 250 கிலோமீட்டருக்குட்பட்ட ஏனைய உபநகரங்கள் உட்பட இன்று ஏறத்தாழ 120 குடும்பங்கள் கெருடாவிலை பூர்விகமாக கொண்டவர்கள் வாழ்கின்றார்கள். அதாவது குடும்பத்தில் குடும்ப தலைவன் அல்லது தலைவி அல்லது இரண்டுபேரும் எம் கிராமத்தின் பூர்விகமாக இருக்கின்றார்கள், மக்கள் தொகை என பார்க்கின்றபோது ஏறத்தாழ 250க்கும் 300க்கும் இடைப்பட்டதாக இருக்கின்றது. இதற்குள் சிறுவர்கள் குழந்தைகளும் உள்ளடக்கப்படுகின்றார்கள்.

இதே போல அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், ஸ்கண்டிநேவியன் நாடுகள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்றவற்றிலும் வாழ்கின்றார்கள். இப்படியாக சிதறியிருக்கும் முத்துக்களை ஒரு மாலையாக உருவாக்கும் ஒரு நூல் போல கெருடாவில்.கொம் (Keurdavil.Com) முயல்கின்றது.

2003ம் ஆரம்பிக்கப்பட்ட எமது இணையத்தளத்தில் ஆரம்பத்தில் கனடாவிலுள்ள மக்களையும் ஊர் மக்களையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டில் கெருடாவில் மக்கள் ஒன்றியத்துடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்தது.

நீண்ட கால நோக்கில் எமது கிராமத்தில் வாழ்பவர்களுக்கும் ஏனைய நாடுகளில் வாழ்பவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு நட்பும் உறவும் நீடித்திருப்பதற்கான ஆக்க பூர்வமான செயல்பாட்டை முன்னெடுக்க முயல்கின்றது.

இந்த பூமிப்பந்தில் நாம் பௌதீக இடைவெளியில்( Physical Distance) வாழ்ந்தாலும் உள்ளத்தாலும் உணர்வாலும் எமது ஆணிவேர் கெருடாவில் என்பதனை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்வது எமது வரலாற்றுக் கடமை.

எமது தலைமுறையினருக்கு எவ்வாறு பொருளாதார ரீதியில் சொத்து சேர்ப்பது அவசியமோ அதேபோன்று எமது பிள்ளைகளுக்கு எமது பூர்விகம் எது என்பதனை எடுத்துக்காட்டி வரலாற்றுச் சொத்தினையும் சேர்த்து கொடுத்தல் அவசியமாகின்றது. இல்லாவிட்டால் அவர்கள் வரலாற்று அனாதைகள் ஆகிவிடுவார்கள்.

"சிந்திப்போம் செயல்படுவோம்"

செ. காந்தி

Aug 27, 2020